2027 ஆம் ஆண்டிற்கு வழங்குநர்களைப் பதிவு செய்தல்

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை

(கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு)

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையினால் 2027 ஆம் ஆண்டிற்கு தேவையான பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக தகைமையுள்ள வழங்குநர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு உத்தேசிக்கப்படுகிறது. அதன் பிரகாரம், இலங்கை அரசாங்க பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் பதிவு செய்வதற்கு விரும்பும் பொருள் வழங்குநர்கள், சேவை வழங்குநர்கள் மற்றும் நிறுவனங்களிடம் இருந்து விண்ணப்பப்படிவங்கள் கோரப்படுகின்றன.

பதிவு செய்யக்கூடிய வகுதிகள்

பதிவு செய்வதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிரதான வகுதிகளின் கீழ் விண்ணப்பிக்கலாம்.

1. பொருட்கள் வழங்குதல்

1.1 தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் (மரத் தளபாடங்கள், கதிரை, மேசை, கோப்புக் கபட், அலுமாரி, சலவை இயந்திரம் எரிவாயு அடுப்பு, குளிர்சாதனம், தொலைக்காட்சி போன்றன.)

1.2 கணினி, கணினி துணைப்பாகங்கள் மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் (லெப்டொப், டெஸ்க்டொப், அச்சு இயந்திரம், ஸ்கேனர், கெமரா, ட்ரோன் இயந்திரம், தொலைபேசி (கையடக்க/ நிலையான) புரொஜக்டர், அடையாள அட்டை அச்சு இயந்திரம், டோனர், காட்ரிஜ், ரிபன், UPS போன்றன)

1.3 மென்பொருள் (வைரஸ் காட், வின்டோஸ், MS Office போன்றன)

1.4 அலுவலக காகிதாதிகள் (பேனை, பென்சில், பைல், கடதாசி, போல்டர் போன்றன)

1.5 ஏனைய காகிதாதிகள் (PVC அடையாள அட்டை கார்ட்கள் போன்றன)

1.6 நிர்மாணப் பொருட்கள் (சீமெந்து, மணல், கல், மண், பலகை, பைப் போன்றன)

1.7 மின் உபகரணங்கள் (மின்விளக்கு, வயர், பிளக், சுவிட்ச், மின்விசிறி போன்றன)

1.8 வாகன உதிரிப் பாகங்கள், டயர், பட்டரி மற்றும் உராய்வு நீக்கி எண்ணெய்

1.9 உணவுப் பொருட்கள் மற்றும் சில்லறைப் பொருட்கள்

1.10 இரசாயனப் பொருட்கள், மருந்துகள் மற்றும் பார்மசி பொருட்கள்

1.11 நீர் பம்பி மற்றும் குழாய்க் கிணறு உபகரணங்கள்

1.12 துணிமணிகள் மற்றும் அலங்கார உற்பத்திகள்

1.13 துப்புரவேற்பாட்டுப் பொருட்கள்

1.14 விளையாட்டு உபகரணங்கள்

1.15 விலங்கு காது அடையாளம் (மாடுகள், ஆடுகள், செல்லப் பிராணிகள் மற்றும் வேறு விலங்குகளை அடையாளம் காண்பதற்காக இலத்திரனியல் மற்றும் இலத்திரனியல் அல்லாத)

2. சேவை வழங்குதல்

2.1 அச்சு சேவை (புத்தகம், அறிவித்தல், மாதிரிப் பத்திரங்கள் போன்றன)

2.2 வாகன திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்பு சேவை

2.3 கணினி மற்றும் மின் உபகரணங்கள் பழுதுபார்த்தல் சேவை

2.4 AC அமைப்பு பழுதுபார்த்தல்

2.5 கணனி அமைப்பு வலையமைப்புக்கு உட்படுத்தல் மற்றும் பாதுகாப்பு கெமரா பொருத்துதல்

2.6 புகைப்படமெடுத்தல் மற்றும் வீடியோ காணொளி எடுத்தல் சேவை

2.7 கட்டட பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் சேவை (மின்சாரம், நீர்க்குழாய், தோட்ட அலங்காரம், கூரை, பார்ட்டிசன் வேலைகள் போன்றன)

2.8 சிறிய நிர்மாண விடயங்கள் (திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்பு)

2.9 பாதுகாப்பு மற்றும் சுத்திகரிப்புச் சேவை

2.10 நிகழ்ச்சிகள் மற்றும் உற்சவ ஏற்பாட்டு சேவை

2.11 பிரயாண வசதிகள் (வாகன வாடகை சேவை)

விண்ணப்பிக்கும் செயன்முறை

I. வழங்குநர்களைப் பதிவு செய்யும் அச்சிடப்பட்ட விண்ணப்பப்படிவத்தை நிறுவனத்தின் பிரதான அலுவலகத்தினால் அல்லது **www.aib.gov.lk** என்ற வலைத்தளத்தினால் பெற்றுக் கொள்ள முடியும்.

II. ஒரு உருப்படிக்காக வழங்குநர்களைப் பதிவு செய்யும் மீளளிக்கப்படாத கட்டணம் ரூபாய் 2000/- ஆகும். சகல உருப்படி வரிசை இலக்கங்களுக்கும் (1.1 முதல் 2.11 வரை) வேறுவேறாக கட்டணங்களை செலுத்தி அச்சிடப்பட்ட விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பித்து பதிவு செய்தல் வேண்டும்.

III. கட்டணத்தை இந்த நிறுவனத்தின் நிதிப் பிரிவிற்குச் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டின் மூலப்பிரதி அல்லது தலைவர், கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை எனும் பெயரில் எழுதப்பட்ட காசோலையுடன் விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

IV. விண்ணப்பப்படிவத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள சகல தகவல்களும் சரியாக இருக்க வேண்டுமென்பதுடன், தேவையான ஆவணங்களுடன் (வியாபார பதிவுச் சான்றிதழ் TIN, VAT சான்றிதழ், கடந்த ஆண்டின் கணக்குக் கூற்று போன்றன) சமர்ப்பித்தல் வேண்டும்.

V. முழுமையற்ற அல்லது தேவையான ஆவணங்கள் இணைக்கப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

VI. **https://forms.gle/n9ftdwkcPu66KPNi9** இந்த நீடிப்பை பயன்படுத்தி அல்லது கீழே தரப்பட்டுள்ள QR குறியீட்டை பயன்படுத்தி விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களை ஆங்கில மொழியில் மாத்திரம் சரியாக உள்ளிட்டு Google Form பூர்த்தி செய்தல் கட்டாயமாகும். (ஒரு விண்ணப்பதாரர் பல உருப்படி வரிசை இலக்கங்களின் கீழ் விண்ணப்பப்படிவங்களை அனுப்பிய போதும் விண்ணப்பப்படிவத்தின் "இல. 4, விண்ணப்பிக்கும் வகுதி" இன் கீழான விடயங்கள் மாத்திரம் மாற்றமடையின் ஒரு வாய்ப்பை மாத்திரம் பயன்படுத்தி குறித்த Google Form ஐ பூர்த்தி செய்தல் போதுமானது)

VII. முழுமைப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2026.11.17 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கொண்டுவந்து ஒப்படைத்தல் அல்லது பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது மேல் மூலையில் "வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2027" என்று குறிப்பிடல் வேண்டும்.

நிபந்தனைகள் மற்றும் ஒழுங்குவிதிகள்

I. வழங்குநர்களுக்கு பொருட்கள் மற்றும் சேவைக் கட்டளைகளை வழங்கும் போது பெறுகை வழிகாட்டலின் பிரகாரம் தகைமைகள் கவனத்தில் கொள்ளப்படும்.

II. பொருட்கள் மற்றும் சேவைகளை கொள்வனவு செய்வதற்காக குறைந்தபட்சம் 30 நாள் கடன் காலஎல்லையை வழங்குதல் வேண்டும்.

III. முற்பணம் வழங்குதல் அல்லது பொருட்கள்/ சேவைகளை உரியவாறு நிறுவனத்திற்கு ஒப்படைப்பதற்கு முன்னர் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படமாட்டாது.

IV. பதிவு செய்தல் மாத்திரம், பொருட்கள் மற்றும் சேவைக் கட்டளைகளை வழங்குவதற்கான உறுதிமொழி கிடையாது.

V. தேவைப்பாட்டின் அடிப்படையில் பதிவு செய்த வழங்குநர்களுக்கு அப்பால் கொள்வனவு செய்யும் உரிமை நிறுவனத்திற்கு உரியது.

VI. பதிவு செய்த வழங்குநர்களின் பட்டியல் பகிரங்கப்படுத்தப்படுவதுடன், இந்தப் பட்டியல் ஒரு வருடத்திற்கு செல்லுபடியாகும்.

VII. விலைமனுக்கள் கோரும்போது 03 சந்தர்ப்பங்களுக்கு மேல் பதிலளிக்காத/ செயல்நிலையில் பங்குபற்றாத விண்ணப்பதாரர்களை பட்டியலில் இருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

VII. எந்த சந்தர்ப்பத்திலும் விண்ணப்பப்படிவங்களை நிராகரிக்கும் அல்லது பதிவினை இரத்துச் செய்யும் உரிமை நிறுவனத்திற்கு உரியது.

IX. மேலதிக விபரங்களுக்கு அலுவலக நேரங்களில் (திங்கள் முதல் வெள்ளி மு.ப. 8.30 முதல் பிற்பகல் 4.00) பிரதான அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

தலைவர்,
கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை,
இல. 117, சுபத்ராராம மாவத்தை,
கங்கொடவில, நுகேகொட,
தொலைபேசி : 0112384000
வலைத்தளம் : www.aib.gov.lk
Email : supply@aib.gov.lk
திகதி : 2026.11.03